| | பத்திரிக்கை வெளியீடு<br>*Reserve Bank of India* |
|---|---|
| தகவல் தொழில் நுட்பத்துறை, மைய அலுவலகம், எஸ்.பி.எஸ் மார்க், மும்பை 400001 | இந்திய ரிசர்வ் வங்கி |
| DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001<br>போன் Phone: 91 22 2266 0502 | வெப்சைட்Website: www.rbi.org.in<br>இ மெயில் Email: helpdoc@rbi.org.in |

டிசம்பர் 04, 2020

**1949 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டத்தின் (கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொருந்தும்) பிரிவு 35 A இன் கீழ் சிவாஜிராவ் போசலே சஹாகரி பாங்க் லிமிடெட், புனே, மஹாராஷ்ட்ரா நிறுவனத்திற்கு வழங்கிய வழிகாட்டு உத்தரவுகளின் கால நீட்டிப்பு**

இந்திய ரிசர்வ் வங்கி மே 03, 2019 தேதியிட்ட DCBS.CO.BSD-I/D14/12.22.254/2018-19 வழிகாட்டு உத்தரவின்படி, சிவாஜிராவ் போசலே சஹாகரி பாங்க் லிமிடெட், புனே, மஹாராஷ்ட்ராவை மே 04, 2019 வர்த்தகம் முடிவுற்றதிலிருந்து ஆறு மாத களத்திற்கு வழிகாட்டு உத்தரவுகளின் கீழ் வைத்தது. கடைசியாக செப்டம்பர் 30, 2020 தேதியிட்ட DOR.CO.AID./No.D-24/12.22.254/2020-21 வழிகாட்டுதல் உத்தரவின் படி டிசம்பர் 04, 2020 வரை நீட்டிக்கபட்டிருந்தது.

2. இந்திய ரிசர்வ் வங்கி, 1949 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டத்தின் (கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொருந்தும்) பிரிவு 35 A இன் துணைப்பிரிவு (1) உடன் இணைந்த பிரிவு 56 இன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, சிவாஜிராவ் போசலே சஹாகரி பாங்க் லிமிடெட், புனே, மஹாராஷ்ட்ரா வங்கிக்கு வழங்கிய மே 03, 2019 தேதியிட்ட DCBS.CO.BSD-I/D14/12.22.254/2018-19 உத்தரவின் செல்லுபடி காலத்தை அவ்வபோது மாற்றியமைத்து, கடைசியாக டிசம்பர் 04, 2020 வரை நீட்டித்திருந்த நிலையில், தற்போது டிசம்பர் 02, 2020 தேதியிட்ட DOR.CO.AID./No.D-37/12.22.254/2020-21 உத்தரவின்படி மதிப்பாய்வுக்கு உட்பட்டு டிசம்பர் 05, 2020 முதல் மார்ச் 04, 2020 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து நீட்டிக்கிறது என்பதைப் பொது மக்களின் தகவலுக்காக அறிவிக்கிறது.

3. உத்தரவுகளின் கீழ் உள்ள பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாறாமல் இருக்கும். மேற்கண்ட கால நீட்டிப்பை அறிவிக்கும் டிசம்பர் 02, 2020 தேதியிட்ட உத்தரவின் நகல், வங்கியின் வளாகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படும்.

4. இந்திய ரிசர்வ் வங்கியின் மேற்கூறிய கால நீட்டிப்பு மற்றும் / அல்லது திருத்தங்களால் வங்கியின் நிதி நிலைமையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது குறித்து இந்திய ரிசர்வ் வங்கி திருப்தி அடைந்துள்ளதைக் குறிக்காது.

**(யோகேஷ் தயால்)**

**பத்திரிக்கை வெளியீடு : 2020-2021/728** தலைமை பொது மேலாளர்